இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு மறுமொழியாக, “நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல, மாறாக, அப்பங்களை வயிறார உண்டதால்தான் என்னைத் தேடுகிறீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை மானிட மகன் உங்களுக்குக் கொடுப்பார். ஏனெனில் தந்தையாகிய கடவுள் அவருக்கே தம் அதிகாரத்தை அளித்துள்ளார்” என்றார். (‘யோவான் 6:24-25)

# சீடர்களுக்குப் பரிவுள்ளம் இன்றியமையாதது

## திருத்தந்தை வலியுறுத்துகிறார்

வத்திக்கான்: இயேசு கூறும் ஓய்வு என்பது உலகத்திலிருந்து தப்பிப்பது அல்ல, மாறாக தனிப்பட்ட நல்வாழ்வுக்கான பின்வாங்கல் என்றும், ஏழை எளிய மக்களின் முகத்தில் பரிவைக் காணும் உள்ளம் கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஜூலை 21 ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய ஞாயிறு மூவேளை செப உரையின்போது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மாற்கு நற்செய்தியில் இடமெற்றுள்ள ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் என்ற பகுதியில் உள்ள இறைவார்த்தைகள் குறித்து எடுத்துரைத்தார்.

இருவர் இருவராக இயேசுவால் அனுப்பப்பட்ட சீடர்கள் தங்கள் பணியிலிருந்து திரும்பி வந்தவுடன் இயேசுவைச் சுற்றிக்கூடி நின்று தாங்கள் என்ன செய்தார்கள் என்பதை எடுத்துரைத்தார்கள், அவர்களிடம் இயேசு, நீங்கள் தனியாக பாலைவனத்திற்குச் சென்று ஓய்வெடுங்கள் என்று கூறுகின்றார் என எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், ஓய்வு, கடவுளின் பரிவு என்னும் இரண்டு கருத்துக்களை மையப்படுத்தி தனது மூவேளை செப உரையினை மக்களுக்கு வழங்கினார்.

சீடர்களின் உடல்சோர்வைப் பற்றி கவலைப்படும் இயேசு, நமது பணியில், வாழ்வில் இத்தகைய கொடிய சோர்வினை நாம் சந்திக்க நேரிடும் என்றும் கூறுகின்றார்.



துன்புறும் பாலஸ்தீன குழந்தைகள்

உதாரணமாக நமது பணியை முன்னெடுத்துச் செல்ல மேற்கொள்வதில் உள்ள ஆர்வம், நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை எப்படி செய்வது அதில் வரும் பலன்கள் என்ன என்பது பற்றிய கவலை போன்றவற்றினால், தேவையானது எது என்பதை நாம் அறியாமல் நமது ஆற்றலை வீணாக்கி உடல் மனச் சோர்வடைகின்றோம் என்றும் கூறினார்.

ஓய்வு, பரிவு இரண்டும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளதை நற்செய்தி எடுத்துரைக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் இத்தகைய ஓய்வினை எடுக்கக் கற்றுக்கொண்டோமானால் பரிவினை நாம் பெற்றுகொள்ளலாம் என்றும் கூறினார்.

பரிவு கொண்டவர்களாக நாம் இருக்கும் போது, இரக்கமுள்ள பார்வை, அடுத்தவரின் தேவையை அறிந்து கொள்ளல், பணிகளை எப்படிச் செய்வது, எப்படி நிறுத்துவது என்ற கவலைகளால் நுகரப்படாத இதயம், அமைதியில் இறைவனை ஆராதித்தல், இறைவனின் அருளைப் பெறுதல் ஆகியவை நமக்கு சாத்தியமாகும் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அதிகப்படியான வேலைப்பளு, அவசரமான உலகத்தில் பணி போன்றவை குடும்பங்களில் நிலவுகின்றன என்று சுட்டிக் காட்டிய திருத்தந்தை அவர்கள், பெற்றோர்களைக் காலையிலும் இரவிலும் காணாமல் குழந்தைகள் வளர்கின்றார்கள் என்றும் இது சமூக அநீதி என்றும் கூறினார்.

*-செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்*

# மந்தின் பங்கில் உலக திருமண தினக் கொண்டாட்டம்

மந்தின், நெகிரி செம்பிலான். இங்கு அமைந்துள்ள புனித அலோசியஸ் பங்கில் முதல் முறையாக கடந்த ஜூலை திங்கள், 20-ம் நாள் ‘உலக திருமண தினம்’ ‘வார்த்தையை மிஞ்சிய அன்பு’ என்ற கருப்பொருளில் கொண்டாடபட்டது. அன்று, பங்குத்தந்தை அருள்பணி கிறிஸ்தபர் சூசைபிள்ளை அவர்களின் தலைமையில் அருள்பணி கிறிஸ்தோபர் லோ உடனிருக்க, மாலை 4.00 மணிக்கு நவநாள் செபத்தை தொடர்ந்து திருப்பலி கொண்டாடப்பட்டது.

பன் மொழியில் நடைபெற்ற இத் திருப்பலியில் பங்கு மக்கள் ஏறக்குறைய 250 பேர்களோடு, திருமணமாகி 52 வருடம் முதல் 6 மாத கால வரையிலான 47 தம்பதினரும் பங்கேற்றனர். இவர்கள் திருப்பலியில், தங்களின் திருமண வாக்குறுதியை அவரவர் தாய் மொழிகளில் புதுப்பித்து கொண்டனர்.



அருள்பணி கிறிஸ்தபர் சூசைபிள்ளை அவர்கள் மறையுரையில் ஒவ்வொரு தம்பதியினரும் நல்லாயன் தன்மையான வழிகாட்டுதல், பராமரிப்பு, தியாக மனப்பான்மை போன்ற பண்புகளை கொண்டிருத்தல் வேண்டும் என்றும் குடும்பங்களில் புரிந்துணர்வு அடிப் படையில் அன்பின் பரிமாற்றம் இருக்கும் போது, அந்த அழகான உறவு நீண்ட காலம் நிலைத்திருக்கும் என்றும் விவரித்தார். இதனை தொடர்ந்து பங்குத்தந்தை அவர்களின் சிறிய இறைவேண்டலோடு, மூத்த தம்பதியினர் அணிச்சல் வெட்டி இந்நிகழ்வை தொடக்கி வைத்தனர்.

தொடர்ந்து முதல் முறையாக ஏற்பாடு செய்யபயப்பட்ட உலக திருமண தினம் சிறப்பாக நடைபெற உதவிய அனைவருக்கும் குறிப்பாக மந்தின் புனித அலோசியஸ் மற்றும் நீலாய் புனித தெரேசம்மாள் பங்கைச் சார்ந்த குடும்ப நல வாழ்வு குழுவினருக்கு, குடும்ப நல வாழ்வு குழுவின் பொறுப்பாளர் சகோ. ஜோன் மில்டன் தம்பதியினர், நன்றியினை தெரிவித்து கொண்டனர்.



தொடர்ந்து, புகை படம் எடுத்தல், விளையாட்டு போட்டிகள், பாட்டு நிகழ்ச் சிகள் என பல நிகழ்ச்சிகளில் அனைத்து இன தம்பதியினரும் பங்கேற்றனர், சுமார் ஒன்றரை மணி நேரம் நடந்த இந்நிகழ்வுவில் கலந்து கொண்ட தம்பதினர் தங்கள் திருமண நாளை பின் நோக்கி பார்க்கவும், பசுமையான நினைவுகளை பிறரோடு பகிர்ந்து கொள்ள அருமையான வாய்ப்பாக அமைந்தது என்று கூறினர். இறுதியாக அருள்பணி கிறிஸ்தபர் சூசைபிள்ளை அவர்களின் ஆசிரோடும் விருந்து உபசரிப்போடும் இந்நிகழ்வு நிறை வடைந்தது.

திருமதி: லூசியா அலெக்சன்

# புனித யூதா ததேயு பங்கில் குருத்துவ மாணவர் திருத்தொண்டராக அருள்பொழிவு செய்யப்பட்டார்

**ராவாங்:** 27 ஆண்டுகளுக்குப் பிறகு, இங்குள்ள புனித யூதா ததேயு பங்கு மீண்டும் ஒரு திருத்தொண்டர் அருள்பொழிவு நிகழ்வைச் சிறப்பாகக் கொண்டாடியதில் மகிழ்வுற்றது.

குருத்துவக் கல்லூரி மாணவர் ஜோனாதன் எனுரூ ராவ் அவர்கள் கடந்த ஜூலை 20




அன்று கோலாலம்பூர் உயர் மறை மாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களால் திருத்தொண்டராக அருள் பொழிவு செய்யப்பட்டார்.

சராஸ், புனித பிரான்சிஸ் அசிசி பங்கைச் சேர்ந்தவரான 52 வயதான இவரின் அருள்பொழிவு கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள அருகிலிருந்தும் தூரத்திலிருந்தும் அருள்பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகள் மற்றும் பொது நிலையினர் என இறைமக்கள் வருகைத் தந்தனர்.

ஒரு மாதத்திற்கு முன்பே ஏற்பாடுகள் தொடங்கியதால், இது ஒரு சமூகக் கொண்டாட்டமாக இருந்தது. பங்குத் தந்தை அருள்பணி வின்சென்ட் தாமஸ் மற்றும் அவரது பணிக்குழுவினர் இக்கொண்டாட்டத்திற்காக விடாமுயற்சியுடன் பல்வேறு பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொண்டாட்டத்தின் முடிவில், ஏற்பாட்டுக் குழுத் தலைவர் டாக்டர் கிரேஸ் ஞானப்பிரகாசம் பல்வேறு குழுக்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்புக்கும் வருகைத்தந்த அனைவுக்கும் நன்றி தெரிவித்தார். தொடர்ந்து, இச்சிறப்பு திருப்பலியும் அருள்பொழிவு திருச்சடங்கும் சீராக நடைபெற பெரும் பங்காற்றிய அருள்பணி மைக்கல் அவர்களுக்கும் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் நன்றி தெரிவித்தார்.

புதிதாக அருள்பொழிவுப் பெற்ற திருத்தொண்டர் தனது உரையில், தனக்காக இடைவிடாது இறைவேண்டல் செய்த அவரது தாயார் திருமதி ஜெயமேரிக்கு தனது நன்றியைத் தெரிவித்தோடு உறுதுணையாக இருந்த குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும், அருட்சகோதர சகோதரிகள், அருள்பணியாளர்கள் யாவருக்கும் நன்றி மாலை சூட்டினார்.

நிறைவாக, தமது பயணத்தின்போது, அனைத்து வகையிலும் நல்லாதரவும், இறைவேண்டலும் வழங்கி வந்த புனித யூதா ததேயு பங்குத்தந்தைக்கும், பங்கு மக்ளுக்கும், அடுத்திருக்கும் பத்து ஆராங் புனித மிக்கேல் சிற்றாலய மக்களுக்கும் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

# ‘தூய ஆவியின் உடனிருப்பில் உரையாடல் வழி பகுத்தறிதல்’

## வட்டார தீபகற்ப மலேசியா பேரவை 2024

நடைபெறவுள்ள தீபகற்ப மலேசியா வட்டார மேய்ப்புப்பணி பேரவை 2024-ன் (RPA2024) இதயமாக இருப்பது அதன் கருப்பொருளான "தூய ஆவியில் உரையாடல்" என்பதாகும். இது 2021 இல் திருத்தந்தை பிரான்சிஸ் கூட்டொருங்கியக்கத் திருஅவைக்கான ஆயர் மன்றத்திற்கு அழைப்பு விடுத்தபோது அவர் தேர்ந்தெடுத்தக் கருப்பொருளாகும்.

இதில் நமக்கெழும் கேள்வி என்னவெனில், "தூய ஆவியில் உரையாடல்" (Conversation in the Spirit) என்றால் என்ன, அது ஏன் ஆயர் பேரவைக்கு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது என்பதை ஆய்ந்தறிவது அவசியமாகும். அத்தோடு, 2026-ல் நிகழவுள்ள மலேசிய மேய்ப்புப்பணி பேரவை என்பது உண்மையில் என்ன என்பதையும் ஆழ்ந்துணர வேண்டும்.

மேற்கண்ட 2026ல் நடைபெறவுள்ள மலேசிய மேய்ப்புப்பணி பேரவையை யொட்டிய பெரும்பாலான விவரங்கள் அதன் இணையதளத்தில் வழங்கப் பட்டுள்ளன. ஆரம்பத்தில் "ஆன்மீக உரையாடல்" என்று பெயரிடப்பட்ட இக்கருப்பொருள், ஒருவரின் கேட்கும் திறனின் தரம் மற்றும் பேசும் வார்த்தைகளின் தரம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதாகத் தோன்றியது. ஆனால், "தூய ஆவியில் உரையாடல்" என்பது,




வெறுமனே வெளிப்படுத்தப் பட்ட வார்த்தைகளாக இருந்துவிடாமல், உரையாடலின்போது கேட்பவர் மற்றும் பேசுபவர் இருவரிலும் எழும் தூய ஆவியாரின் தாக்கத்தை அறிந்துணர கவனம் தேவை.

இந்த 2026ல் நடைபெறவுள்ள மலேசிய மேய்ப்புப்பணி பேரவையையொட்டிய உரையாடல் நடைமுறையின் சிறப்பு என்னவென்றால், இந்த உரையாடல் வழி, ஒருவர் நம்பிக்கையில் கடவுளின் அன்பிற்கு உணர்வு பூர்வமாகவும் இறைவார்த்தை இறைவேண்டல் மூலமாகவும் கடவுளுடன் ஓர் உன்னத உறவை ஏற்படுத்துகின்றார் என்பதாகும். தூய ஆவியானவர் அவருக்கு எதை உணர்ந்துகிறார், எதை நோக்கி வழிநடத்துகிறார், அல்லது எதைக் கற்பிக்கிறார் என்பனவற்றை ஆய்ந்துணர்வதில் இது அடங்கி உள்ளது.

“ஆக்கப்பூர்வமாகச் செவிமடுத்துல்” மற்றும் "இதயத்தில் இருந்து பேசுதல்" ஆகியவை **"தூய ஆவியில் உரையாடல்" எனும்** பகுத்தறிவு செயல்முறைக்கு முக்கியமாகும். இந்த உரையாடலில், தூய ஆவியின் செயல்பாட்டை உணரும் விதத்தில் ஒருவர் தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்கிறார்.

ஆக்கப்பூர்வமாகச் செவிமடுப்பதன் வழி ஒருவர் மற்றவர்களின் வார்த்தைகளையும் அவரது கருத்துக்களையும் மனதில் பதிய வைக்க இயலும். இதற்கு ஒரு திறந்த மற்றும் ஏற்றுக்கொள்ளும் இதயம் தேவைப்படுகிறது. இதனால் கவனம் சிதறாது. கவனமுடன் செவிமடுப்பதன் வழி பேச்சாளரின் பேச்சுத் திறனில் அல்ல, மாறாக அவர் வெளிப்படுத்தும் போதனையில் கருத்தூன்ற இயலும்.

ஒருவரின் உரையை கூர்ந்து செவிமடுக்கும் போதுதான், உரை நிகழ்த்தும் நபர் வெளிப்படுத்தும் கருத்துக்களை மனதில் பதிய வைக்க இயலும். இவ்வாறு கருத்தூன்றி கேட்பதால், ஆவியானவர் பேசுவது போல மனதில் உணர முடியும்.

இந்தச் சூழலில் தான் இப்பேரவையை ஒருங்கிணைக்கும் மத்திய பணிக்குழு உறுப்பினர் பேரருட்தந்தை ஜூட் மிராண்டா, அருள்பணி சைமன் லெப்ரோய் மற்றும், அருள்பணி லோரன்ஸ் இங் ஆகியோர் மேற்கூறப்பட்ட செயல் முறையானது, மறைமாவட்டம், பங்கில் மற்றும் பணிக்குழுக்களில் மேய்ப்புப்பணி வாயிலாகப் பயன்படுத்தப்படலாம் என்று ஆலோசனை வழங்கியுள்ளனர்.

# நிலைவாழ்விற்கு அப்பம் அல்ல, அப்பாவைத் தேடுவோம்!

இன்று பொதுக்காலத்தின் 18ஆம் ஞாயிறு. பாஸ்கா பெருவிழாவிழாவை அடுத்து மாற்கு நற்செய்தியை வாசித்து வந்த நாம், யோவான் நற்செய்தியின் 6ஆம் அதிகாரத்திற்குத் தாவியுள்ளோம். ஏனெனில் நற்கருணையின் பொருள் குறித்து தியானிக்கத் தாய் திருஅவை நம்மை அழைக்கிறது. யோவான் நற்செய்தியின் 6ஆம் அதிகாரம் நற்கருணையின் சிறப்பை ஆழமாக எடுத்துரைக்கிறது.

இன்றைய நற்செய்தியில், வயிறார உண்ட மக்கள், இயேசுவையும் அவரது சீடர்களையும் தேடிப் படகேறிக் கப்பர்நாகுமுக்குச் சென்றனர். அந்த மக்களைப் பார்த்து, “நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல, மாறாக, அப்பங்களை வயிறார உண்டதால்தான் என்னைத் தேடுகிறீர்கள்” (யோவான்6:26) என இயேசு கேட்கிறார். அதே கேள்வியை இன்று கேட்டால், நம்மிடம் பதில் இருக்கிறதா! நான் ஏன் கிறிஸ்துவராக இருகின்றேன்? இயேசுவை நான் ஏன் தேடுகிறேன்? ஆலயத்திற்கு நான் ஏன் செல்கிறேன்? பழக்கத்தினாலா? கிறிஸ்துவக் குடும்பத்தில் பிறந்து விட்டதனாலா? முதல் வாசகத்தில், பாலைநிலத்தில் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்த இஸ்ரயேல் மக்களின் பசியைப் போக்க ‘மன்னாவை’ வானத்திலிருந்து பொழிந்தார், கடவுள் (விப.16:244;12-15). அந்த மக்களைப் போல, நாமும் வயிற்றுக்காக வாழ்கி றோமா? அல்லது கிறிஸ்துவர் என்ற பெயரில் பெருமை கொள்ளும் நாம், அதன் உண்மைத் தன்மைக்கேற்ப வாழ்கிறோமா?

நற்செய்தியில் புனித யோவான், இயேசுவை ‘புதிய மோசே’ ஆகக் காட்டுகிறார். “என்னைப் போல் ஓர் இறைவாக்கினரை ஏற்படுத்துவார்”(இச.18:15) என பழைய ஏற்பாட்டில் எழுதியுள்ளதைக் குறிக்கும் வகையில் திருத்தூதர் யோவான் இதனை எழுதினாலும், இயேசுவிற்கும் மோசேவிற்கும் இடையிலான வேறுபாட்டை உடனே வெளிப்படுகிறார். “ஐயா, இவ்வுணவை எங்களுக்கு எப்போதும் தாரும்” (யோவா.6:34) என அந்த மக்கள் தங்களது உள்ளத் தாகத்தை வெளிப்படுத்திய பொழுது, “வாழ்வு தரும் உணவு நானே” (யோவா.6:35) என இயேசு தமது மெய்யான நிலையை வெளிப்படுத்துகிறார்.

“அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுவோம்” (மத்.6:33). அவருக்கு ஏற்புடையது என்றால் இறையாட்சியின் பண்புகள். “புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள்” (எபே.6:24) என புனித பவுல், இரண்டாம் வாசகத்தில் வலியுறுத்துவது, இந்த பண்புகளைதான். உடலைச் செதுக்குவது அப்பம் (உணவு), உள்ளத்தைச் செதுக்குவது அப்பா (கடவுள்).

*உடம்பாக் அழியின் உயிரார் அழிவர்*
*திறம் பட மெய்ஞ்ஞானம் சேரவும்மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்*
*உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேன்*
*(திருமந்திரம்)*

உடம்பு அழிந்தால் உயிரும் அழியும் உறுதியான மெய் ஞானத்தை அடைய முடியாது. ஆகவே, உடம்பை வளர்க்கும் வழி அறிந்தேன். அதனால் உயிரையும் வளர்த்துக் கொண்டேன் என்பது ஐந்தாம் நூற்றாண்டுப் பாடலின் பொருள். இதனால்தான் “வாழ்வு தரும் உணவு

| பொதுக்காலம்-18-ஆம் ஞாயிறு | |
|---|---|
| முதல் வாசகம் | விப 16:2-4,12-15 |
| திரு.பாடல் | 77:3-4.23-25. 54 |
| 2-ம் வாசகம் | எபே 4:17.20-24 |
| நற்செய்தி | யோவான் 6: 24-35 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**

நானே” (யோவா.6:35) என இயேசு கூறியுள்ளார். உடலுக்குள் வாழும் உயிரும் ஆன்மாவும் நிலையானது, ஏனெனில் அவை படைத்தவனிடமிருந்து பெறப்பட்டவை (தொநூ.2:7). உடலை விட உயிர் பெரியதென்றாலும் அது வாழ உடல் வேண்டும். உயிரையும் ஆன்மாவையும் வளர்க்கும் உணவை (நற்கருணை) ஆண்டவர் வழங்கியுள்ளார்.

எனவே அப்பத்தைத் தேடாமல், அப்பாவைத் தேடுவோம். அவருக்கு ஏற்புடைய மக்களாக வாழ முற்படுவோம்.

அந்தோணி இன்னாசி, சைபர் ஜெயா